# கோவிட்-19 தடுப்பூசி தொடர்பாக அதிகம் கேட்கப்படும் கேள்விகள் - Version 01

**1. தடுப்பு மருந்து என்றால் என்ன?**

தடுப்பு முருந்து வழங்கல் எனப்படுவது நோய்களில் இருந்து உங்களை பாதுகாப்பதற்கு கொடுக்கப்படும் எளிமையான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன்மிக்க ஒரு சிகிச்சை முறையாகும். உங்கள் உடலின் இயற்கை நோய் எதிர்ப்புச் சக்தியை வலுவூட்டுவதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகின்றது.

**2. கோவிட்-19 வைரஸிட்கு எதிராக நமக்கு ஏன் தடுப்பு மருந்தொன்று தேவைப்படுகின்றது?**

- நோய்களை நாம் தடுத்துக் கொள்வதற்கு தடுப்பு மருந்துகள் மிக அவசியமாகும்
- தடுப்பு மருந்துகள் மூலம் நோய்களை வெற்றிகரமாக தடுத்துக் கொள்வது தொடர்பாக இலங்கைக்கு மிக நீண்ட கால நற்பெயர் உள்ளது
- சிறந்த சுகாதார பழக்கவழக்கங்கள் கோவிட்-19 வைரஸை தவிர்ப்பதற்கு மிக அவசியம் என்ற போதிலும் அவற்றின் மூலம் மாத்திரம் இந்த நோயிலிருந்து தற்காத்துக் கொள்வது சிரமமான காரியமாகும்
- தடுப்பு மருந்துடன் நல்ல சுகாதார பழக்கங்களைப் பேணுவதே இந்நோயின் சவாலை வெற்றி கொள்ளவதற்கான ஒரே மார்க்கமாகும்

**3. கோவிட்-19 தடுப்பு மருந்துகள் எவ்வாறு தயாரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன?**

ஒவ்வொரு தடுப்பு மருந்தும், அதை அறிமுகம் செய்யப்படுவதற்கு முன் கடுமையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. பரீட்சார்த்த மட்டத்தில் உள்ள ஒரு தடுப்பு மருந்தை முதலில் மிருகங்கள் சிலவற்றிற்கும், அதன் பின் முன்சிகிச்சை நிலையத்தில் மனிதர்களுக்கும் கொடுக்கப்பட்டு அதன் பின் பொது மகக்களுக்கு கட்டம் I, II மற்றும் III என சிகிச்சைநிலைய பரீட்சார்த்த கட்டங்களில் அது கொடுக்கப்பட்டதன் பின்பே பொதுவான பயன்பாட்டிட்கு வெளியிடப்படுகின்றது. மேற்படி கட்டங்களில், அது எந்த நோய்க்கு எதிராக உருவாக்கப்பட்டதோ, அது தொடர்பான செயல்திறன் மற்றும் அதன் பாதுகாப்பு போன்றன மதிப்பீடு செய்யப்படுகின்றது.

**4. கோவிட்-19 தடுப்பூசியில் என்ன உள்ளது?**

பெரும்பாலான தடுப்பு மருந்துகளில் பிறபொருள் (antigen) துணையூக்கிகள் (adjuvant) பாதுகாப்பிகள் (preservatives) மற்றும் நிலைப்படுத்திகள் (stabilizer) அடங்குகின்றன. கோவிட்-19 தடுப்பூசியை பொருத்தமட்டில் இதில் செயலிழக்கம் செய்யப்பட்ட வயிரஸ் வடிவத்தில் உள்ளதுடன், கோவிட்-19 நம்மை என்றேனும் தாக்கும் பட்சத்தில் அதை இனைங்கண்டு தாக்க நம் உடலை பழக்கப்படுத்துகின்றது.

**5. கோவிட்-19 தடுப்பு மருந்து எவ்வாறு செயற்படுகின்றது?**

- வயிரஸின் உயிரற்ற ஒரு பாகம் (வயிரஸின் மேற்பரப்பில் உள்ள ஒரு புரத வகை) தடுப்பு மருந்தில் உள்ளதுடன், நமது உடலின் இயற்கை நோய் எதிர்ப்புச் சக்திகளைப் பயன் படுத்தி, நோய்க்கு எதிரான தடுப்பு ஆற்றலை கட்டியெழுப்ப மருந்திட்கு துணை புரியப்படுகின்றது.
- அத்துடன், B மற்றும் T எனப்படும் ஞாபகக் கலங்கள் மூலம் பலமான நோய் எதிர்ப்புச்சக்தி மற்றும் ஞாபகச் சக்தி உருவாக்கப்படுகின்றது.
- தடுப்பூசி பெற்றவருக்கு கோவிட்-19 வயிரஸ் பின்னர் தொற்றினால், அதை ஞாபகம் வைத்துள்ள மேற்படி கலங்கள் வயிரஸை தாக்கி நபரை நோயில் இருந்து பாதுகாக்கின்றது.

**6. தடுப்பூசியை எடுப்பது ஏன் அவசியமாகின்றது?**

- கோவிட்-19 துரிதமாக தொற்றிப் பரவக்கூடியதாகும்
- அது கடுமையான மற்றும் நீண்ட கால நோய் தொடர்பான சிக்கல்களை ஏற்படுத்தி, மருத்துவமனைப் படுத்தல் அவசியமாகி இறுதியில் மரணத்தைக் கூட இது ஏற்படுத்தக் கூடியதாகும்
- தடுப்பு மருந்தைப் பெறுவதன் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தினர் மற்றும் உங்களைச் சூழ உள்ளவரகளையும் இந்த நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்
- நீங்கள் சிறந்த உடலாரோக்கியத்துடன் இருப்பது மட்டுமே உங்களை இந்த நோயில் இருந்து உங்களைப் பாதுகாக்காது மற்றும் அதை வேறு ஒருவருக்கு தொற்றச் செய்வதை தடுக்காது
- உங்களுக்கு கோவிட்-19 வைரஸ் தொற்றி, நோய் அறிகுறிகள் இல்லாதிருப்பினும், உங்களை அறியாமலேயே உங்களை நெருங்கிப் பழகுபவர்களுக்கு உங்களிடமிருந்து இந்நோய் தொற்ற வாய்ப்புண்டு
- தடுப்பு மருந்தைப் நாம் பெறுவதன் மூலம் நம்மையும் ஏனையவர்களையும் பாதுகாக்க நாம் துணை புரிவதோடு இது ஒரு முக்கிய சமூகக் கடமையுமாகும்.

**7. கோவிட்-19 பாதுகாப்பானதா?**

ஏனைய அனைத்து தடுப்பு மருந்து வகைகளைப் போன்றே, பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, கோவிட்-19 தடுப்பு மருந்தும் பல்வேறு பட்ட கடுமையான பரீட்சார்த்த பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்பே இத்தடுப்பு மருந்து மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

- கோவிட்-19 தொற்று ஒரு பாரிய உலக நெறுக்கடியாக ஆகிய நிலையில் அதற்கு எதிரான தடுப்பு மருந்தொன்றை இயன்றளவு அவரசமாக கண்டுபிடிக்கும் பாரிய முன்னெடுப்பில் உலகம் முழுவதிலும் உள்ள பல மருத்துவத் துறை விஞ்ஞானிகள் இணைந்து பாடுப்பட்டனர்
- அதன்போது தடுப்பு மருந்தின் பாதுகாப்புத் தன்மைக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது
- பல்வேறுபட்ட தடுப்பு மருந்துகள் துரிதமாக மதிப்பீடு செய்யப்பட்டன
- இதன்போது குறுகிய வழிமுறைகள் கையாளப்படவில்லை
- முறையான சிகிச்சை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன
- அந்த வகையில் ஒரு பொதுவான இலக்கிற்காக, திறன்மிக்கவர்களின் ஈடுபாடு, பாரிய அர்ப்பணிப்பு மற்றும் நிதிச் செலவுடன் மேற்கொள்ளப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரின் கடும் உழைப்பின் சாதனையையே இன்று நம் முன் உள்ளது.

**8. தடுப்பூசியில் இருக்கக் கூடிய பொதுவான பக்கவிளைவுகள் யாவை?**

ஏனைய எல்லா தடுப்பு மருந்துகளில் போன்றே கோவிட்-19 தடுப்பு மருந்திலும் தடுப்பூசி போடப்படும் இடத்திவ் நோவு, மிதமான காய்ச்சல், தசை நோவு, தலைவலி, உடல் நடுக்கம் போன்ற சில பக்கவிளைவுகள் இருக்கலாம். இதை விட பாரதூரமான பக்கவிளைவுகளும் ஏற்பட இடமுண்டு என்ற போதிலும் அதன் சாத்தியம் மிகக் குறைவே.

**9. நீங்கள் கோவிட்-19 தடுப்பூசியைப் பெறுவதற்கு முன் உங்களுடைய சுகாதார சேவை வழங்குனருக்கு நீங்கள் என்ன தகவல்களை வழங்க வேண்டும்?**

உங்களுடைய சுகாதார சேவை வழங்குனருக்கு கீழ் காணும் தகவல்கள் உட்பட உங்கள் உடல் நிலை பற்றிய அனைத்து விடயங்களையும் கூற வேண்டும்:

- இதற்கு முன் ஏதேனும் ஒரு மருந்து. தடுப்பு மருந்து அல்லது அவற்றின் ஏதேனும் கூறிட்கு உங்களில் ஒவ்வாமை அறிகுறிகள் வெளிப்பட்டனவா என்ற விடயம்

- உங்களுக்கு காய்ச்சல் உள்ளதா என்ற விடயம்
- உங்களுக்கு இரத்தக் கசிவு பிரச்சினைகள் உள்ளனவா என்ற விடயம்
- உங்கள் நோய் எதிர்ப்புச் சக்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா அல்லது உங்கள் நோய் எதிர்ப்புச் சக்தியில் தாக்கம் செலுத்தி வரும் ஏதேனும் மருந்து வகைகளை நீங்கள் தற்போது பெற்று வருகின்றீர்களா என்ற விடயம்
- நீங்கள் (பெண்ணாக இருப்பின்) கற்பம் உற்றுள்ளீர்களா என்ற விடயம்
- நீங்கள் தாயப்பால் ஊட்டும் ஒருவரா என்ற விடயம்
- இதற்கு முன் வேறு வகை கோவிட்-19 தடுப்பு மருந்து எதனையேனும் பெற்றுள்ளீர்களா என்ற விடயம்

**10. தடுப்பூசியை எடுக்கக் கூடாதவர்கள் யாவர்?**

- கருவுற்றுள்ள பெண்கள்
- பால் கொடுக்கும் தாய்மார்கள்
- 18 வயதை விடக் குறைந்தவர்கள்
- இதற்கு முன் தடுப்பு மருந்துகளுக்கு ஒவ்வாமை அறிகுறி வெளிப்படுத்தியவர்கள் (தடுப்பு மருந்தைப் பெறுவதற்கு முன் இவர்கள் மருத்துவ ஆலோசனைப் பெற வேண்டும்)
- தடுப்பு மருந்தொன்றின் ஏதேனும் ஒரு கூறிற்கு ஒவ்வாமை அறிகுறி வெளிப்படுத்தியவர்கள் (தடுப்பு மருந்தைப் பெறுவதற்கு முன் இவர்கள் மருத்துவ ஆலோசனைப் பெற வேண்டும்)
- ஏதேனும் மருந்து அல்லது உணவு வகைக்கு ஒவ்வாமை அறிகுறி வெளிப்படுத்தியவர்கள் (மருத்துவமனைப்படுத்தல் தேவைபடுமளவு)
- ஒவ்வாமை தொடர்பான வரலாறு உள்ளவர்கள் மருத்துவமனையில் தங்கி மருத்துவ கண்காணிப்பின் கீழ் தடுப்பூசியை பெறுதே சிறந்தது

**11. நான் தடுப்பூசி பெறும்வரை, என்னை கோவிட்-19 தொற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்ள என்னென்ன நடவடிக்கைகளை நான் மேற்கொள்ள வேண்டும்?**

உங்களையும் ஏனையவர்களை இத்தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள நீங்கள் கீழ்காணும் நடவடிக்கைகளை கடைபிடிக்கலாம்:

- முகக் கவசம் அணிதல்
- சமூக இடைவெளியைப் பேணுதல்
- கூட்டங்களை இயன்றளவு தவிர்த்தல்
- கைகளை அடிக்கடி கழுவிக் கொள்ளல்

**12. கோவிட்-19 பற்றிய மேலும் சில கேள்விகள், சந்தேகங்கள் எனக்குள்ளன. அது தொடர்பான நம்பகமான தகவல்களை நான் யாரிடமிருந்து பெற முடியும்?**

இணையத்திலிருந்தும் நீங்கள் தகவல்களை பெற முடியும் என்ற போதிலும் அவ்வாறு செய்யும் போது நம்பகமான இணையத்தளங்களை மட்டுமே பார்க்கவும். உலக சுகாதார அமைப்பு, இலங்கை தொற்று நோய்ப் பிரிவு, சுகாதார மேம்பாட்டுப் பணியகம் போன்ற அமைப்புக்களின் இணையத்தளங்களுக்கும் நீங்கள் தேவையான தகவல்களுக்காக உட்பிரவேசிக்கலாம். அல்லது சுவசெரிய அமைப்பின் 1999 என்ற அவசர ஹொட்லயின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.